2020 மார்ச் 12]

சொல்லியிருக்கிறோம், அவர்கள்மீது வழக்கு தொடுத்திருக்கிறோம். அவர்களைக் கொண்டு வந்து Court–ல் நிறுத்தினோம். அந்தச் சூழ்நிலை எல்லாம் இருக்கின்றது. வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்திற்காக, NCLT–க்குப் போயிருக்கின்ற காரணத்திற்காக, இதற்கெல்லாம் ஒரு முடிவு கிடைத்தவுடன் நிச்சயமாக, விவசாயிகளுக்குச் சேர வேண்டிய பணத்தை வாங்கிக் கொடுப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை; நிச்சயமாக வாங்கிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

கால்நடை மருத்துவமனை

***60200—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடை மருத்துவமனையைத் துவக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி, முதலில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவித்து பின்பு கால்நடை மருந்தகமாகவும் பின்னர், கால்நடை மருத்துவமனையாகவும் தரமுயர்த்தப்படும். கால்நடை கிளை

[2020 மார்ச் 12

நிலையம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். பைங்காட்டூர் ஊராட்சியில் 1,832 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. ஆனால், பைங்காட்டூர் மற்றும் அதனருகில் உள்ள நல்லூர், ஓரத்தூர் மற்றும் குறிச்சி ஆகிய ஊராட்சிகளையும் சேர்த்து சுமார் 3,900 கால்நடை அலகுகள் உள்ளன. ஆகவே, பைங்காட்டூரில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதையும், இதுகுறித்து அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவாரூர் மாவட்டம் விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பகுதி. விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் மிக முக்கியமானது கால்நடைகள். இந்தக் கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய வாழ்வாதாரத்தில், ஒருநாள் பிற வேலைகளை நிறுத்திவிட்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறகாரணத்தினால்தான் இந்தவினாவைஎழுப்பியிருக்கிறோம். இந்த பட்ஜெட் தொடரிலே, கால்நடை மருத்துவமனையை அறிவிக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன். அதேபோல, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில், எழிலூர் மற்றும் ஆண்டாங்கரை போன்ற பகுதிகளில் இதே கோரிக்கை தொடர்பான கருத்துருவை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதையும் விரைந்து இந்த மானியக் கோரிக்கையிலே அறிவிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவைப்படுமாயின் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருந்தால் அதுகுறித்து*

2020 மார்ச் 12]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்துறைப்பூண்டி பகுதியில் பாரம்பரிய இனமான உம்பளாச்சேரி மாடுகள் கொருக்கை பால் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. எங்களுடைய தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தப் பகுதியில் வளர்க்கக்கூடிய மாடுகளுக்கு தீவனமாக பசும்புல் வளர்ப்பதற்காக வேளாண்மை அலுவலர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், இந்த 5 ஆண்டுகளாக அந்தப் பணியிடம் காலியாக இருக்கிறது. பாரம்பரியமான மாட்டினங்களை வளர்ப்பதற்கு தீவனங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எங்களுடைய பகுதியில் கோடைக்காலம் வந்தாலே நாய்கள் வெறிபிடித்து அங்கே இருக்கக்கூடிய மனிதர்களையும், கால்நடைகளையும் கடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த ஆண்டுகூட சித்தமல்லி என்ற கிராமத்தில் ஒரே நாளில் 90 பேரை அந்த நாய்கள் கடித்திருக்கின்றன. கடந்த வாரம் இடையூர் ஊராட்சியில் கிட்டத்தட்ட 3 பேரை நாய்கள் கடித்திருக்கின்றன. இந்த நிகழ்வானது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரு நாய்கள் அதிக அளவில் கோடைக் காலத்தில் வருவதாகவும், அவை வெறி நாய்களாக இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். உடனடியாக அந்தப் பகுதியில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆய்வு செய்ய நம்முடைய கால்நடை மருத்துவர்களை அனுப்பி வைத்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் முழுவதும் நான் 14 மாவட்டங்களை பல்வேறு நிகழ்வுகளுக்காகச் சுற்றினேன். அப்போது கால்நடைகள் இருந்து, அந்தக் கால்நடை மருத்துவ முகாம்களில் மாடுகள் இருந்து, ஊழியர்கள் இருந்து நான் பார்த்த ஒரே இடம் மன்னார்குடி பகுதி மட்டும்தான். அதிலும் குறிப்பாக, என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய திருவாடனைப் பகுதி என்பது தஞ்சைக்கு இணையாக நெற்களஞ்சியமாகப் போற்றக்கூடிய ஒரு பகுதி. முழுக்க முழுக்க விவசாயத்தையும், மழையையும் நம்பியே உள்ளது. வானம் பார்த்த பூமியாக, மழையை நம்பி இருக்கக்கூடிய மக்களாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்கூட முடங்கிக் கிடக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. கிட்டத்தட்ட 157-க்கும் மேற்பட்ட நாட்டு மாடு இனங்கள் இருந்த நிலையில், இன்றைக்கு வெறும் 32 நாட்டு மாடு இனங்கள் மட்டும்தான் இருக்கக்கூடிய ஓர் அவல நிலை தமிழகத்தில் இருக்கின்றது.இந்தநிலைமாற்றப்படவேண்டும்.வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய, அதிகமாகப் பால் கொடுக்கின்ற ஜெர்ஸி மாடுகளால்தான் இன்றைக்கு கிராமப்புறங்களில் அதிகமாக சர்க்கரை வியாதி வருவதாகவும் சில ஆராய்ச்சியாளர்கள் கருத்து சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அந்த மாடுகளைப் புறந்தள்ளிவிட்டு, நாட்டு மாடுகளை உருவாக்குவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும் என்கிற கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாட்டு இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடையநோக்கம்என்பதைமுதலில்தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் சேலம், தலைவாசலில் 1,800 ஏக்கர் பரப்பளவில் 1,050 கோடி ரூபாயில் மிகப் பிரம்மாண்டமான ஒரு கால்நடை பூங்காவை உருவாக்குவதற்காகஅடிக்கல்நாட்டியிருக்கின்றார்கள்என்பதைஇந்த நல்ல நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2020 மார்ச் 12]

(மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்புதான் நாட்டு இனங்களைக் காக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய காங்கேயம் இனக் காளைகளைக் காப்பதற்காக இரண்டரை கோடி ரூபாய் செலவில் பவானிசாகர் அருகில் ஓர் ஆராய்ச்சி மையத்தை உருவாக்கியிருக்கின்றோம். மேலும், உம்பளாச்சேரி காளைகள் மற்றும் நாட்டு இனங்களாக இருக்கின்ற நம்முடைய வெள்ளாடுகளைக் காக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அந்தவகையில் தமிழகத்தில் இருக்கின்ற நாட்டு இனங்கள் அனைத்தும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவுக்கே முன்னோடியாக இருக்கின்றார்கள் என்பதை இந்த வேளையில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு அவல நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அதுபோன்ற ஒரு நிலை தமிழகத்தில் இல்லை என்பதை முதலில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு ஜல்லிக்கட்டிற்கு வருகின்ற காளைகளைப் பார்த்தீர்களென்றால், அந்தக் காளைகள் அனைத்துமே நாட்டு இனங்களைச் சேர்ந்தவை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் இருக்கின்ற நாட்டு இனங்களைக் காப்பதற்காகத்தான் இன்றைக்கு மிக பிரம்மாண்டமான ஒரு கால்நடைப் பூங்காவை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், அந்த நாட்டு இனங்கள் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றனவோ, அந்தந்தப் பகுதிகளிலேயே ஆராய்ச்சி மையத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஏறத்தாழ 20 கோடி ரூபாயைக் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த நாட்டு இனங்களைக் காப்பதில் இன்றைக்கு தெற்கு ஆசியாவிலேயே நம்முடைய தமிழகம்தான் முன்னோடி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். வங்கக் கடலோரம் மீளாத் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை இன்றைக்கு சிறப்பான முறையில் தமிழகத்தில் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய முதலமைச்சர், போற்றுதலுக்குரிய குடிமராமத்து நாயகர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், அரசுக்கு உறுதுணையாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி, குடியாத்தம் வட்டம், குடியாத்தம் ஒன்றியம், கூடநகர் ஊராட்சியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதற்கு முன்னதாக கூடநகர் ஊராட்சியில் போதிய கால்நடை அலகுகள் இருப்பதோடு, அங்கே பரப்பளவும், குடிமக்களும் அதிகளவில் இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியில் ஒரு கால்நடை துணை நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி, ஒரு புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க 3,000 கால்நடை அலகுகள்

இருக்க வேண்டும். அதேபோல், கால்நடை கிளை நிலையங்கள் 3 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். அதேபோல், கால்நடை கிளை நிலையம் செயல்படுவதற்கு வாடகையில்லா கட்டடம் அளிக்கப்பட வேண்டும். இதுபோன்ற விதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமேயானால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கூடநகர் பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு அதிகாரிகளை அனுப்பி வைத்து, அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

சி.டி. ஸ்கேன் வசதி

***42765—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சியிலுள்ள அரசு வட்ட மருத்துவமனைக்கு கணினி வழி உடலூறுப்பு ஊடுகதிர்படம் (*C.T. Scan*) வசதி செய்ய அரசு முன்வருமா?*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, ஆலங்குளத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மருத்துவமனையில் கணினிவழி உடலுறுப்பு ஊடுகதிர்படம் அதாவது C.T. Scan *வசதி செய்ய தற்சமயம் அவசியம் எழவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், 35 கிலோ மீட்டர் அருகில் இருக்கக்கூடிய தென்காசி மருத்துவமனையில்* C.T. Scan *பொருத்தப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோல, 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய திருநெல்வேலி மருத்துவமனையில் 2* C.T. Scan *கருவிகளும், ஒரு* M.R.I. Scan *கருவியும் நிறுவப்பட்டு, ஒரு நாளில்*